Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 13    [29-09-1993]    புதன்கிழமை    ஓசை 223

## தரமற்ற பொருள்களை விநியோகித்த வர்த்தக முகாமையாளர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் உணவு முத்திரைக்கும், மாணவ முத்திரைக்கும் தரமற்ற பொருள்களை விநியோகித்தமைக்காகவும் அரிசியை கட்டுப்பாட்டு விலையிலும் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்தமைக்காகவும் சங்க வர்த்தக முகாமையாளர் மேலதிக விசாரணைகளுக்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொதுநிர்வாகத் தொடர்பகம் தெரிவித்துள்ளது. இது குறித்து தொடர்பகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் உணவு முத்திரைக்கும் மாணவ முத்திரைக்கும் யாழ். ப. நோ. கூட்டுறவு சங்கத்தில் தரமான பொருள்களை விநியோகிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் இருந்தும் அதன் கிளைகள் மூலம் தரமற்றதும் பாவனைக்கு உதவாததுமான பொருள்கள் விநியோகிக்கப்பட்டமை பொதுமக்கள் முறைப்பாட்டையடுத்து கண்டுபிடிக்கப்பட்டது. கச்சேரி புனர்வாழ்வு பகுதியில் [3ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். குடாநாட்டில் அகோரக் குண்டுவீச்சு;

# 23 பொது மக்கள் பலி; 26 பேர் படுகாயம்

## விமானப்படை அனர்த்தம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் வலிகாமம், தென்மராட்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பரவலான தாக்குதலை நடத்தின. நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை விமானங்கள் நடத்திய அகோரக் குண்டு வீச்சில் வலிகாமத்தில் மூன்று பேரும், தென்மராட்சியில் 20 பேருமாக மொத்தம் 23 பேர் கொல்லப்பட்டனர். இருபத்தியாறுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பெருமளவு சொத்துக்களும் நாசமாகின.

நேற்றுக் காலை வலிகாமம் பகுதியில் கொக்குவிலில் இரண்டு சியாமா செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின. இதேவேளை தென்மராட்சியில் புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் கிளாலி, எழுதுமட்டுவாழ், நுணாவில், அல்லாரை பகுதிகளில் குண்டுவீச்சு தாக்குதலையும் ரொக்கட் தாக்குதலையும் நடாத்தின. மேலும் தென்மராட்சிப் பகுதிகளில் உலங்கு வானூர்தியொன்று பரவலான கலிபர் தாக்குதலை நடாத்தியது.

மாலை நுணாவில், சங்கத்தானை பகுதிகளில் இரண்டு புக்காரா விமானங்கள் குண்

## குழந்தைகள், பெண்கள் உட்பட

## திருமலையில் பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கி அழிப்பு

### 3 பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு

மூதூரில் சிறிலங்கா பொலிஸ் நிலையம் ஒன்று நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத் தாக்குதலில் மூன்று சிறிலங்கா பொலிசார் கொல்லப்பட்டனர், ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர், பொலிசாரின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன,

நேற்று அதிகாலை 12.40 மணியளவில் திருக்கோணமலை மாவட்டம் மூதூரில் உள்ள இலுப்பைச் சோலை பொலிஸ் நிலையம்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர். புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதலினால் அக் காவல் நிலையம் முற்றாக அழிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை.

## கைப்பற்றப்பட்டவை

# பதுங்கு குழியில் 20 பேர் பலி!

## சங்கத்தானையில் கோரச்சம்பவம்

(நமது நிருபர்)

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய மூர்க்கத்தனமான தாக்குதல்களினால் பதுங்கு குழிக்குள் மூடுப்பட்டதால் 20 பேர் மூச்சுத் திணறிப் பலியானதுடன் ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்ட இரண்டு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் திடீரென அடுத்தடுத்து மூன்று குண்டுகளை வீசின. இதில் ஒரு குண்டு பதுங்கு குழியின்மீது வீழ்ந்து வெடித்ததால் அதற்குள் பாதுகாப்புத் தேடிப் பதுங்கிக் கொண்ட இருபதுபேர் மூச்சுத் திணறிப் பலியாகினர் அருகில் நின்ற ஐவர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு பலியானவர்களில் 11 பேரது சடலங்கள் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையிலும் ஏனைய 9பேரது

(3ஆம் பக்கம் பார்க்க)

## சங்கத்தானையில்பலியாகிய இருபது பேர் விபரம்

(நமது நிருபர்]

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சின் போது பதுங்கு குழியொன்றுமூடப்பட்டதால் அதில் மரணமான இருபது பேரின் விபரம் வருமாறு.

ஜெகதீஸ்வரன் சாந்தி (30), இவரது பிள்ளைகளான ஜெனனி (07], தசாயினி [11] திணேஷ் [08], சுந்தையா செல்வராசா இவர்களின் பிள்ளைகளான செல்வராசா யசோதா(18), செல்வராசா சுஜாத்தா (16), சின்னராசா பவானி (21], இவரின் சகோதரிகளான சின்னராசா நிரஞ்சனி [13], சின்னராசா பிரயாகினி [10], கோபாலரட்ணம் சுரேக்கா[09] இவரின் சகோதரி கோபாலரத்தினம் சுபாஜினி (15), பாலசுந்தரம்

(3ஆம் பக்கம் பார்க்க)

புக்காரா விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடாத்தின.

இத் தாக்குதல்களில், கொக்குவிலில் காலையில் நடந்த தாக்குதலில் மூன்று பெண்கள் ஸ்தலத்தில் பலியாகினர். மாலையில் சங்கத்தானையில் இடம் பெற்ற தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

## ஒளிவீச்சு வெளியீடு

ஒளிவீச்சு ஒகஸ்ட் மாத வீடியோ சஞ்சிகை இன்று மாலை 6 மணிக்கு நிதர்சனம் அமலன் அரங்கில் காண்பிக்கப்படும். இச் சஞ்சிகையில் வழமையான அம்சங்களுடன் கடற் கரும்புலிகளின் தாக்குதல்கள்பற்றிய சிறப்புச் செய்தியும் இடம்பெறுகின்றது

## கைப்பற்றப்பட்டவை

இலுப்பைச்சோலை பொலிஸ் காவல் நிலையம் தகர்க்கப்பட்டதையடுத்து அங்கிருந்து பொலிசாரின் பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

| | | | |
|---|---|---|---|
| ஃ ரி - 56 துப்பாக்கி | — 01 | ஃ விசில் | — 10 |
| ஃ ரவைக்கூடுகள் | — 14 | ஃ பொலிஸ் சீருடை | — 27 சோடி |
| ஃ 303 ரைபிள் | — 09 | ஃ பொலிஸ் சீருடை துணி | — 17 லெந்தி |
| ஃ ரவைகள் | — 09 | ஃ தொலைநோக்கி | — 01 |
| ஃ எஸ் 84 ரவைக்கூடு | — 01 | ஃ கமரா | — 01 |
| ஃ ஏ. கே. கோல்சர் | — 06 | ஃ வோக்கி | — 01 |
| ஃ ஜே. ஆர் குண்டு | — 06 | ஃ வோக்கி பக் சார்ஜர் | — 01 |
| ஃ பராலைட் | — 04 | ஃ இராணுவ பெல்ட் | — 11 |
| ஃ ஐ எம் ரவைகள் | —2215 | ஃ தலைக்கவசம் | — 02 |
| ஃ 303 ரவைகள் | — 100 | ஃ இராணுவத் தொப்பி | — 09 |
| ஃ ஜெனரேட்டர் | — 01 | ஃ கிற்பாக் | — 01 |
| ஃ ரீச்சட் | — 16 | ஃ காற்சட்டை | — 01 |
| ஃ மழைக்கவசம் | — 36 | ஃ இராணுவ சப்பாத்து | — 35 சோடி |
| ஃ சீருடை | — 13 | ஃ சிவில் சப்பாத்து | — 21 சோடி |
| ஃ கத்தி | — 02 | ஃ குளிர் தாங்கு தொப்பி | — 21 |
| ஃ ஒயில்கான் | — 01 | ஃ பொலிஸ் தொப்பி | — 04 |
| | | ஃ ரேப் செற் | — 01 |
| | | ஃ ரேடியோ | — 01 |
| | | ஃ பொலிஸ் தடி | — 09 |
| | | ஃ 203 ஷெல் | — 01 |
| | | ஃ பணம் | — 5565 ரூபா 50 சதம் |

# கோவில் மீது குண்டு வீச்சு; 3 பெண்கள் ஸ்தலத்தில் பலி

## கொக்குவிலில் துயர சம்பவம்

நேற்றுக் காலை 10.45 மணிமுதல் கொக்குவில், இணுவில், கோண்டாவில், சுன்னாகம் பகுதிகளை வட்டமிட்ட இரு சியாமார் செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள், கொக்குவில் நந்தாவில் கோவிலின் முன் நிகழ்த்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் மூன்று பெண்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். 11.05 மணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

நந்தாவில் அம்மன் கோவிலின் முன்னால் வீசப்பட்ட குண்டொன்று அடர்ந்த மரங்களின் மேல் வீழ்ந்து வெடித்தது. இதனால் எதிர்வீட்டிலிருந்து பாதுகாப்புக்காக கோவில் கோபுர வாசலில் தஞ்சமடைந்திருந்த பொன்னுத்துரை ஞானேஸ்வரி (வயது 60) எனும் வயோதிப பெண் உடல் சிதறிப் பலியானார். மரங்களின் கீழ் பாதுகாப்பு தேடிய மக்களில் மேலும் இரு பெண்கள் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்களும் அடையாளம் காண முடியாத நிலையில் சிதறிக் காணப்பட்டன.

### பதுங்கு குழியினால் சிறுவர் தப்பினர்

இச்சம்பவத்தின் போது, அருகிலுள்ள சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்த சிறுவர்கள் 15 பேர், அதே மரங்களில் கீழேயிருந்த திறந்த பதுங்கு குழியில் தஞ்சமடைந்திருந்தனர் இவர்களில் ஒரு சிறுமி பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா

[3ஆம் பக்கம் பார்க்க]

## கொக்குவில் குண்டு வீச்சு பலியான மூவர் விபரம்

(நமது நிருபர்)

நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சியாமார் செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய அகோரக் குண்டுத் தாக்குதல்களினால் மூன்று பெண்கள் ஸ்தலத்தில் பலியாகினர். அவர்களின் விபரம் வருமாறு;

பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60 வயது) நந்தாவில் அம்மன் கோவிலடி கொக்குவில்.

குருநாதன் நாகேஸ்வரி (55 வயது) தையிட்டி, தற்போது நந்தாவில் கொக்குவில்.

அமிர்தலிங்கம் இலட்சும்மா (55 வயது) கொக்குவில்.

இவர்களது உடல்கள்நேற்று யாழ் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

(பா (சி) (நி)

# அம்மன் ஆலய வாசலில் இரத்தக் குளம்

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலின்முன் நேற்றுக் காலை நடாத்தபட்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் நந்தாவில் அம்மன் கோயில் கோபுரமும், உள் மண்டபமும் பலத்த சேதமடைந்து காணப்பட்டன. ஆலய முன்வாசலில் தஞ்சமடைந்திருந்த வயோதிப பெண் உடல்சிதறிப் பலியான இடத்தில் இரத்தம் குளமாக காணப்பட்டது. ஆலய முன் சுவர்களில் இரத்தக் கறைகள் பரவிக் காணப்பட்டன. ஆலயத்தின் தேர்முட்டி பலத்த சேதமடைந்திருந்தது. அருகிலிருந்த சனசமூக நிலையத்தின் ஓடுகள் யாவும் சிதறுண்டு. உள்ளிருந்த தளபாடங்களும் சேதமுற்றிருந்தன. சனசமூக நிலைய வாசலில்

[3ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு வீச்சு விமானங்களை புலிகள் சுட்டுக் கலைத்தனர்

கொக்குவில் நந்தாவில் பகுதியில் நேற்றுக் காலை 11.05 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்த சியாமா செட்டிரக குண்டு வீச்சு விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் பலத்த எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர். பல தடவை விமானங்கள் குத்திப் பதிந்த போதும் விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்ப்பினால் இரண்டு முறைகளே

(3ஆம் பக்கம் பார்க்க)

# முன்னேற முயன்ற இராணுவத்தை புலிகள் எதிர்த்து கடும் தாக்கு!

## இயக்கச்சிப் பகுதியில் தொடர்கிறது

(பளை)

இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் விமானப்படையின் உதவியுடன் கவசவாகனங்கள் சகிதம் பளை நோக்கியும், ஆனையிறவுப் பகுதியில் இருந்து கரையோரமாகவும் முன்னேற முயன்றனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது.

இராணுவம் மேற்கொண்டுள்ள இவ் ராணுவ நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான துருப்புக்களும், டாங்கிகளும் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஆனையிறவு முகாமிலிருந்து எறிகணைகள் புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி, முகமாலை கெற்பலி, பண்தரிகுடியிருப்பு, பளை ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இவ் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து இப்பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## தேர்வு மண்டபம் இடமாற்றம்

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுக்காக பளைமகா வித்தியாலயத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் தேர்வு நிலையம் தற்காலிகமாக கிளி/ வேம்பொடுகேணி சி.சி த. க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் விரும்பியமாணவர்கள் யா/ உசன் இராமநாதன் ம. வித்தியாலய தேர்வு மண்டபத்தில் அல்லது யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய தேர்வு மண்டபத்திலும் தோற்றலாமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## கிளாலி எழுதுமட்டுவாளில் புக்காரா அகோர தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான இரு புக்காரா விமானங்கள் கிளாலி, அல்லிப்பளைப் பகுதிகளின் மீது நேற்றுக் காலை 6 மணியளவில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. கடல்கரைகளில் மட்டும் 5 இற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியதுடன் விமானத்தில்

(3ஆம் பக்கம் பார்க்க]

## நுணாவில், அல்லாரையில் புக்காரா குண்டு வீச்சு

(தென்மராட்சி)

நுணாவில் பகுதியில் நேற்று காலை 6.15 மணியளவில் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின புக்காரா விமானம் இரண்டு பலாலி பகுதியில் இருந்து திடீரென வந்து சுற்றாமல் முதலிலேயே தொடர்ந்து இரு குண்டுகளை வீசின. இவ் இரு குண்டுகளும் ஒரு வெளிக் காணியில விழுந்தும் வெடிக்கவில்லை அவ் விமானம் பின்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில் விமானக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பரவலாக விமானத்தாக்குதல்கள் நடைபெற்றன நேற்று முந்தினம் காலை 7.30 மணியளவில் வவுனியா பூவரசன்குளம் பகுதியில் குருக்களூரில் புக்காரா விமானம் ஒன்று குண்டினை வீசியது சேதவிபரம் தெரியவரவில்லை.

கடந்த சனியன்றும் மாலை

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**காவேரி சீயாக்காய்ப் பவுடர்**

பேன், சொடுகு அழுக்கு அறவே இல்லாமல் செய்யும் ஷம்போவை விட பன்மடங்கு பலனைத் தருவது. கிடைக்குமிடம் கணேசா களஞ்சியம் திருநெல்வேலிச் சந்தை பணிமனை வர்த்தக நிலையம் பலாலி றோட். (6119)

**விபத்து**

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த வேளை ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர் இருவர் காயமடைந்தனர். தொண்டைமானாறைச் சேர்ந்த இ. மகேந்திரன், க. கருணாநிதி ஆகிய தொழிலாளிகள் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (யோ)

**உடன் விற்பனைக்குண்டு**

சைக்கிள், பிரவுண் பேட்டுடன் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 'மல்லிகாபதி' மானிப்பாய். (6130)

**பாராட்டும் கௌரவிப்பும்**

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை பாராட்டிக் கௌரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சியொன்று இன்று 2.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் சார்பில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள போட்டிகளில் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையை முன்னிட்டே இந்த சிறப்பு நிகழ்ச்சியான விருந்து உபசாரத்தை பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஏற்பாடு செய்துள்ளார். இப் பிரதேச செயலர் பிரிவு தொடர்ந்த ஐந்தாவது தடவையாக முதலிடத்தைப் பெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பனைவளக்கண்காட்சிக்காக தற்காலிகசெயலகம் அமைப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றிணைந்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஐப்பசி இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடாத்தவிருக்கும் மாபெரும் பனை வளக் கண்காட்சிக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பொருட்டு தற்காலிகமாக கிளிநொச்சி பிரதான வீதி, 155-ம் கட்டையில் கண்காட்சி செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

கண்காட்சி போட்டிகள் சம்பந்தமான விபரங்களைப்பெற்றுக் கொள்வதற்கு இச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**ஒஸிக்கு எம்.பி. பதவி**

ஒஸி அபேகுணசேகரவுக்கு தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஐ.தே.கட்சி மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது.

ஐ.தே.க தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அலெக் றொபட்சனை அப்பதவியில் இருந்து நீக்கி ஒஸி அபயகுணசேகரவுக்கு வழங்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

எமது கல்லூரியின் பழைய மாணவனும்,
சாரணர் குழு அங்கத்தவரும்,
வலிகாமம் கல்விக்கோட்ட முதற் கரும்புலியுமான

**மேஜர் புவியரசன்/புகழரசன்**

[சுப்பிரமணியம் நாககீதன், அரியாலை]

**நினைவஞ்சலிக் கூட்டம்**

இடம் : கல்லூரி மண்டபம்

காலம் : 01-10-1993, வெள்ளி காலை 11மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

(6132)

## மலிவு விற்பனை

பல பொருள்கள் மலிவு விலையில்

ரூபா 500/-ற்கு மேற்பட்ட கொள்வனவாளர்களிற்கு

**இலவச பரிசு சீட்டைகள்**

அன்பளிப்புகளிற்கு புதுமை வழி அன்பளிப்பு படங்கள்

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி, (7504) யாழ்ப்பாணம்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26-02-1969

உதிர்வு: 10-10-1992

திதி: 29-09-93

**கிருஷ்ணபிள்ளை கிருபானந்த விஜயன்**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி, பண்பின் சிகரமாய் திகழ்ந்து, பாசத்தின் உறைவிட மாய்வாழ்ந்து இறைவனடி சேர்ந்து ஆண்டொன்று ஆகிடினும் எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும் எம் அன்புத்தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சாரப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய்,
தந்தை சகோதரர்கள்,
மாமன்மார், மாமிமார்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
அச்செழு.


(6126)

## அன்னை வேளாங்கண்ணி மாதா திருநாள்

சில்லாலை அம்மன் வீதி, பண்டத்தரிப்பில் எழுந்தருளி இருக்கும் அன்னை வேளாங்கண்ணி மாதா திருவிழா 1993 ஐப்பசி முதலாம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் நடைபெறும் என்பதை பக்தர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சில்லாலை. (6122)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



வாழ்த்தொன்று அனுப்புகிறோம்

வரலாற்றுச் சுடருக்கு

29. 9. 1973



## லெப். வீமா


(ரவீந்திராதேவி தங்கராசா)

வீமா !
வேங்கைகள் வழியிலே
விண்ணுலகில் வீற்றிருக்கும் - உமக்கு
மண்ணுலகில் இருக்கும் நாம் - உம்
உயிர்ப்பு நாள் மடலென்று
வான்வெளியல் அனுப்புகின்றோம் வாழ்த்தாக.

சோதரியே..
இருபதாண்டு முடிகிறது
இவ்வுலகில் நீர் உதித்து
இன்னாளில் வாழ்த்துக் கூற
இங்கு நீ எம் முன்னில்லை. இதனால் தான்
இதயம் கனிந்த வாழ்த்தொன்றை
இங்கிருந்து அனுப்புகின்றோம் விண்ணுக்கு

மறவர் அனைவரும் - உமக்கு அங்கிருந்து
மனமுவந்து கை குலுக்கி வாழ்த்தளிப்பர்
மாவீரராகிய உந்தனுக்கு
மனம் நிறைந்த வாழ்த்துக் கூறி
மறவர் படையில் நாமும் திரள்கிறோம்.

(6127) — நண்பர்கள்.



# லெப். கேணல் குமரப்பா

## (பாலசுந்தரம் இரத்தினபாலன்)

[முன்னாள் யாழ், மட்டக்களப்பு தளபதி]

பிறப்பு **27 05-1957** — வீரச்சாவு **05-10-1987**

**திதி: 29-09-1993 புதன்கிழமை**

இங்ஙனம் :
பெற்றோர், சகோதர சகோதரிகள், மனைவி, நண்பர்கள், உறவினர்.

''செல்வமாளிகை''
நடராசா வீதி, வல்வெட்டித்துறை.

(6116)

## நினைவு கூருகின்றோம் ...

**1993. 09. 29**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்து பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரவி** [அருளானந்தம் ரவீந்திரகுமார் - வந்தாறுமூலை - மட்டு]

1987ஆம் ஆண்டு திருமலையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ். இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த இளைஞன்.

1990ஆம் ஆண்டு கங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**வேலு** [சண்முகம் சிவசாமிவேலு - பிராமணாலங்குளம் - வவுனியா]

யாழ் கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சிவதர்சன்** [ —— சண்முகம் - வவுனியா]

இதேபகுதியில் ஏற்பட்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**அனார்க்கலி/மீரா** [சுவர்ணசுந்தரி சாம்பசிவம் - சிறிமுருகன் குடியேற்றம் - வல்வெட்டித்துறை]

**நாயகி/பவுண்** [சாந்தி சின்னராசா - கோண்டாவில் வடக்கு - யாழ்]

வவுனியா - கச்சல்கொடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மற்றும் ஊர்காவற்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கீதன்** [விஜயரத்தினம் தெய்வநேசன் - பெரியகோமரசன்குளம் - மட்டு]

**சைமன்** [ —— —— வவுனியா]

**காந்தரூபன்** [நடராசா சிவநாதன் - புதுக்குளம் - வவுனியா]

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தின் மிதிவெடி வெடித்ததில் வீரச்சாவெய்திய -

**விலவன்/சுதன்** [கந்தசாமி ஜெயக்குமார் - இடைக்காடு, அச்சுவேலி - யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(இ-7507)

**சிந்தனைக்கு**

நாம் எதைக் கண்டு அஞ்சுகிறோமோ, அதை எதிர்நோக்கித்தான் ஆகவேண்டும். ஏனெனில் நலனை மீண்டும் பெற அதுவே அடிப்படை

— மேக்ஸ் லெர்னர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## பேரினவாதத்தின் இறுதி ஆயுதம்

தமிழர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும், அல்லது ஒழிதக்கட்டப்பட வேண்டும். இதற்கு எந்த வழியைக் கையாளவும் சிங்களப் பேரினவாதம் தயாராக உள்ளது. ஆரம்பத்தில் தனித்து ராணுவத்தீர்வை நாடினார்கள். எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததினால், பொருளாதாரத் தடையையும் இணைத்துக் கொண்டனர். தற்பொழுது அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தையும் தடை செய்ய வேணடும் எனக் கோரத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில், கிழக்கு மாகாண இராணுவத் தளபதி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா இது குறித்து வெகுவாகப் பிரஸ்தாபித்ததோடு, கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முற்பட்டுள்ளார். ''கிழக்கு மாகாணத்தில், செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நிவாரணங்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனாவின் இக்கோரிக்கையானது தனியாக அவரது அபிலாசை என்று கூறிவிட முடியாது. இது சிங்களப் பேரினவாதிகளினதும், ஏன் அரசாங்கத்தின் உள்ளக்கிடக்கை என்றும் கூறலாம். அதாவது, போரில் எவ்வழிமுறையிலாவது வெற்றி பெற்றாக

## கோக்குவில் பகுதியில் 20 பேர் காயமடைந்தனர்

நேற்றுக் காலை கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு யாமார் செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில் காயமடைந்த 20 பேர் விபரம் வருமாறு:-

தி ரவிதாஸ் (04), சி. தேவகி (3), வி. பரமேஸ்வரன் (52) சிவராசா (46), கதிரவேலு (72). மா. பொன்னம்பலம் (55), வி தங்கராசா (61), ஐ லோகேஸ்வரி, இன்பன், ச அமிர்தலிங்கம் (65), சி செல்லத்துரை (75), அ. தம்பித்துரை (50), அருள் செல்லன் (26). பொ. சங்கரப்பிள்ளை 65), க. திருத்தேவி (45), ஐ தங்கம்மா (80), இராசலிங்கம் (65), கு. கார்த்திகேசு (72), பொ. தர்மேந்திரா (34), கு கதிரேசு (60). (பா], [சி]

## சிறிலங்கா அரசின் அறிவிப்பும் செயலும்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசு ஊரடங்கு பிறப்பித்து மக்களை ஆலயங்களில் தஞ்சமடையக் கோரிவிட்டு கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில்மீது குண்டு வீச்சு நடாத்தியுள்ளது.

நேற்றுக்காலை 6மணிமுதல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சிறிலங்கா அரசு காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்ததுடன் அனைத்துப் பொது மக்களையும் அருகிலுள்ள ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு அறிவித்த சில மணி நேரங்களுக்குள் மேற்படி தாக்குதல் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. [சி]

## வைத்தியசாலை உபகரணம் 'வாதுவ'வில் வரும்

யாழ் போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்புச் செய்த மருத்துவ உபகரணங்களில் சில 'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பி வைத்த 25 மருத்துவ கொள்கலன்களில் 15 கொள்கலன்கள் இக்கப்பலில் வரவுள்ளன. இதற்கு சிறிலங்கா அரசாங்கம் இணக்கம் கண்டுள்ளது.

மேலும் இவ்வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கி வைத்த ஜெனரேற்றர் ஒன்றும் எடுத்து வரப்படவுள்ளது. மிகுதியான கொள்கலன்கள் விரைவில் எடுத்துவரப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு கிராமங்களில் பொதுமக்கள் பலர் கைது

[அம்பாறை]

அம்பாறையில் கடந்த 15 ஆம் திகதி ஐந்து பொதுமக்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். அன்று காலை 11.30 மணியளவில் கோரை குறாப் தோட்டத்தில் வைத்து அக்கோட்ட

**அமமன்**

## மனைவி, பிள்ளைகள் இழந்த குடும்பஸ்தர் பரிதவிப்பு

[நமது நிருபர்]

சாவகச்சேரியில உள்ள சங்கத்தானைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்கள் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களால் பழைய மின்சாரக்கட்டடம் தரைமட்டமாகியதுடன் சில வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுமாலை 5.30 மணியளவில் மேற்படி பகுதிக்கு வந்த இரு புக்காரா விமானங்கள் முதலில் மின்சார நிலையக் கட்டடத்தின்மீது வீசிய குண்டினால் அதுதரை மட்டமாகியது. இரண்டாவது குண்டு அருகிலிருந்த வீதியில் வீழ்ந்ததால் அவ் வீதியில பாரிய குழி ஒன்று காணப்படுகிறது. மூன்றாவது குண்டு கோபாலபிள்ளை என்பவரின் வீட்டில் வீழ்ந்ததால் அவ் வீடு முற்றாக பெயர்த்தெறியப்பட்டதுடன் இருபதுஅடி விட்டமுள்ள பாரியகுழி ஒன்று ஏற்பட்டுள்ளது இறுதியாக வீசப்பட்ட குண்டு மரத் தொழிற்சாலைக்குள் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிமீது வீழ்ந்து வெடித்ததால் மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்த அப் பதுங்கு குழி முற்றாக சேதமடைந்தது.

**இடிபாடுகளுக்குள் சடலங்கள்:**

விமானங்கள் தாக்குதலை ஆரம்பித்தும் அப்பகுதிகளிருந்து மக்கள் பாதுகாப்புகருதி மேற்படி பதுங்கு குழிக்குள் பதுங்கிக் கொண்டனர்பதுங்கு குழி இடிந்து வீழ்ந்ததும் அனைவரும் இடிபாடுகளுக்குள் சிககிக்கொண்டனர். ஓடி வந்த அயலவர்கள் பதுங்கு குழியை தோண்டி இடிபாடுகளை அகற்றி சிககியவர்களை மீட்டனர். இம் மீட்புவேலை சுமார் ஒருமணி நேரம்வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

**எங்கும் அழுகுரல்:**

மேற்படி சம்பவத்தில் தனது இளம் மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்த ஜெகதீஸ்வரன் என்பவர் முற்றத்தில் வீழ்ந்து கிடந்து பல மணி நேரமாக கதறி அழுதமை அனைவரது நெஞ்சங்களையும் உருக்கியது. அயல் வீடுகள் எங்கும் ஓரே அழுகுரல்களாகவே இருந்தன. இவ்வீடுகளிலும் இருவர், மூவர் எனப் பலியாகியிருந்தனர். வீட்டு முற்றங்களில் சடலங்களை அடுக்கி வைத்து உறவினர்கள் அவற்றை சூழ்ந்திருந்து கதறி அழுதவண்ணமிருந்தனர்.

## 90கிலோ நிறை குண்டுகள்

(நமது நிருபர்)

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் முன்பாக நேற்றுக் காலை சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் 90 கிலோ நிறையுடைய குண்டுகளை வீசின.

மேற்படி குண்டு வீழ்ந்து வெடித்தபின் எஞ்சிய அதன் விசிறியுடன் இணைந்த பகுதியில் மேற்படி குண்டின் நிறை 90 கிலோ கிராம் என எழுதப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்து இதனை பலரும் பார்வையிட்டுச் சென்றனர்.

**சங்கத்தானையில்**

சந்திரசேகர் [10] இவரது சகோதரி பாலசுந்தரம் ரதி (02) தங்கராசா சசிகலா [18] ரட்ணகோபால் சுதர்சன் [11) கோபாலபிள்ளை சுதர்சன் [09], தங்கம்மா கணபதிப்பிள்ளை [58). க.கௌசிகா [12], செ. மகேஸ்வரி [54]

**வவுனியா**

8 45 மணியளவில் வவுனியா கல்மடு, காக்கையன்குளம் புதுக்குளம், ஈச்சங்குளம் கிராம

## எறிகணை வீச்சில் ஒருவர் காயம்

(தென்மராட்சி)

பூநகரியில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று வீசப்பட்ட எறிகணைகளில் ஒன்று கெற்பலிப்பகுதியில் வந்து வீழ்ந்து வெடித்ததால் அவ் இடத்தைச் சேர்ந்த செ சுந்தரம் என்பவர் காயமடைந்தார்.

## நோய்த்தடுப்பு கருத்தரங்கு

யாழ். இந்துக்கல்லூரி லியோக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள கொலரா நோய்த்தடுப்பு தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 8 00 மணிக்கு ஆனைப்பந்திச் சந்தி புதிய உயர்கலைக் கல்லூரியில் இயங்கும் பாடசாலையிலும் காலை 10. 00மணிக்கு கிளனர் லேன் பாடசாலையிலும் நடைபெறும்.

## குண்டு வீச்சில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

## கப்பல் பயணிகள் காங்கேசனில்

(வடமராட்சி)

திருக்கோணமலை-பருத்தித்துறைக்கான பயணிகள் சேவை நேற்று தடைப்பட்டது. திருக்கோணமலையிலிருந்து வந்த பயணிகள் பருத்தித்துறையை

போரில் எவ்வழிமுறையிலாவது வெற்றி பெற்றாக வேண்டும் என எண்ணுவோரின் விருப்பமாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிடலாம் என ஆரம்பத்தில் கருதிய பேரினவாதிகளுக்கு போரின் நீட்சியும், தோல்விகளும் ஏமாற்றம் அளிப்பவையாகவே இருந்தன. இந்நிலையில், போரில், வெற்றி பெற்றாக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் இராணுவ அணுகுமுறைக்கு இசைவாகப் பொருளாதாரத் தடையும் கொண்டு வரப்பட்டது. பல கோணங்களிலும் செயற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையுடன், எரிபொருள் தடை, மற்றும் கடல் தடைச் சட்டம் என்பவற்றின் காரணமாக தமிழரின் பொருளாதாரக் கட்டமைப்பு முற்றாக நாசமாக்கப்பட்டது.

இருப்பினும், போர் வருடக்கணக்கில் நீடிக்கும் போதும் இராணுவ வெற்றி என்ற குறிக்கோளை அரசால் அடைய முடியவில்லை. இந்நிலையில் தான், சிங்கள இராணுவத்துடன் ஆயுதப் போரை நடத்தும் வேளையில், பட்டினியுடனும் ஒரு போரை நடத்தும் நிலையைத் தமிழ் மக்களுக்கு உருவாக்கி, அதன் மூலம் ஓர் இராணுவ ரீதியான வெற்றியை ஈட்டிவிடலாம் எனச் சிங்களப் பேரினவாத சக்திகள் முற்பட்டுள்ளன. இது அவர்களின் இறுதி ஆயுதமாகும்.

இதன் ஒரு கட்டமாக, தமிழர் பகுதியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேசமனிதநேய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம், தமிழருக்கு இவர்கள் மூலமாகக் கிடைக்கும் சிறிதளவு உதவிகளையும் நிறுத்துவதற்கு சிங்களப் பேரினவாத சக்திகள் முற்படுகின்றன. இந்தவகையில் தான், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண நடவடிக்கைக்கு எல்லைகள் வகுப்பதிலும், இவ் அமைப்புக்கள் மீது அநாவசியமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்த முற்பட்டுள்ளன.

அண்மையில், பாராளுமன்றத்தில் பேசிய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஹாசன் சமரசிங்கா, "சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்கு இருக்கும் வரையும் இந்தப் போரை முடிக்க முடியாது எனத் தன்னிடம் மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா கூறியிருந்தார்" எனத் தெரிவித்துள்ளமையும் இதன் வெளிப்பாடே ஆகும். அதாவது, அரச சார்பற்ற நிறுவனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள் என்பனவற்றின் நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தமிழ்மக்கள் மீது விதிக்கும் கட்டுப்பாடுகள் தளர்வுறுகின்றன. தமிழர் பகுதியில் அரசு மேற்கொள்ளும் அநீதிகள் வெளியுலகைச் சென்றடைகின்றன எனவும் பேரினவாதிகள் கருதுகின்றமை இதற்கான காரணமாகும்.

அதாவது, ஒரு முடப்பட்ட நிலையில் வைத்து தமிழரை ஒழித்துக்கட்ட அரசு விரும்புகின்றது. இராணுவ ரீதியான தாக்குதலுடன் அத்தியாவசிய சேவைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம் எனவும் அது எண்ணுகின்றது, ஆனால், சிங்கள அரசாங்கத்தால் இதனை அடைய முடியாது. ஏனெனில், தமிழ்மக்கள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள். அவ்வாறு இல்லாது விட்டால், தமிழீழப் போராட்டம் இன்றைய வளர்ச்சிக்கட்டத்தை அடைந்திருக்க முடியாது

---

இரத்தக்கறைகள் காணப்பட்டன. முதலில் வீசப்பட்ட குண்டானது அடர்ந்த மரங்களில் மோதி வெடித்ததினால் அச்சூழல் பூராவும் கிளைகளும், இலைகளுமாக இரத்தக்கறைகளுடன் காணப்பட்டன. இம் மரங்களின் கீழிருந்த திறந்த பதுங்கு குழியில் தஞ்சமடைந்திருந்ததனால் அருகிலிருந்த சனசமூக நிலையத்தின் சிறுவர் பாடசாலையின் சிறுவர்கள் உயிர் தப்பியது குறிப்பிடத்தக்கது

ஆலயவாசலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண் பாதுகாப்பிற்காக எதிர் வீட்டிலிருந்து ஓடிவந்து தஞ்சமடைந்திருந்த நிலையில் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

இரண்டாவது குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் வீழ்ந்து வெடித்த குண்டின் சிறகுப் பாகங்கள் கருகிய நிலையில் காணப்பட்டன. அருகிலிருந்த தென்னை மரங்கள் சில வட்டுடன் வெட்டியெறியப்பட்டு சற்றுத் தொலைவில் வீழ்ந்து கிடக்க காணப்பட்டன. இக் குண்டானது வீட்டின் பின்புறத்தில் வீழ்ந்து வெடித்ததால் மேலும் வீட்டில் இருந்த ஒரு பெண் காயமடைந்தார். அவ் வீட்டில் வசித்த ஏனையோர் அந்நேரம் வீட்டில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (11) [09] ச)

## குண்டு

குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின குண்டு வீச்சுத் தாக்குதல் முடிவுற்றபின்னர் 11 15 மணியளவில் மீண்டும் இப் பகுதிக்கு வந்து வட்டமிட்ட புக்காரா குண்டு வீச்சு விமானமொன்றின் மீதும் விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளினால் சுட்டுக் கலைத்தனர் (11), (09), (சி)

## கோவில்

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மேலும் நூல்நிலைய மண்டபத்தில மேசையின் கீழ் பதுங்கிய சிலர் காயமடைந்தனர். இரண்டாவது தடவையாக வீசப்பட்ட குண்டானது, முதற்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சிறிது தொலைவினுள், புலேந்திரன் என்பவரது வீட்டினருகே வீழ்ந்து வெடித்தது இத் தாக்குதலினால் வீடு ஒன்று பலத்த சேதமடைந்ததுடன் நான்குக்கும் அதிகமான தென்னை மரங்கள் வெட்டி எறியப்பட்டது போல் சற்றுத் தொலைவில் வீழ்ந்து கிடக்க காணப்பட்டன. (11), (9), (ச)

---

டத்தில் வைத்து அத்தோட்ட உத்தியோகஸ்தர் சிவப்பிரகாசம் என்பவரை அதிரடிப் படையினர் பிடித்துச் சென்றனர்.

இதே தினமிரவு உமிதி என்ற பகுதியில் தங்கவடிவேல் என்பவரும் அவரது மனைவியும், அமரசிங்கம் என்பவரும் அவரது மனைவியும் அதிரடிப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதனிடையே கடந்த 6ஆம் திகதி காலை 9 மணியளவில் மட்டக்களப்பில் திகிலிவெட்டை பகுதியை சுற்றி வளைத்த படையினர் மொறக் கொட்டாஞ்சேனையை சேர்ந்தவர்களான வேலாயுதம் தில்லைராஜ், ராஜா எனும் இரு பொதுமக்களை கைது செய்து கொண்டு சென்றனர்.

# ஆய்வுக் கட்டுரை

யாழ் பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல்3 00 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞானசங்கத்தின் சமூக விஞ்ஞானப்பிரிவின் தலைவர்பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் அரசியலின் அமைப்பு ஆய்வு இந்திய மாதிரி என்ற தலைப்பில் பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி எஸ் கே. சண்முகநாதன் ஆய்வுக் கட்டுரை ஒன்றினை சமர்ப்பிக்கவுள்ளார்.

## குழந்தைகள்

சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் வைக்கப்பட்டுள்ளன காயமடைந்த ஐவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் காயமடைந்தோர் விபரம் வருமாறு; வை. விஜயகுமார் (13), செ. மங்கையற்கரசி 38). பி.பேதுதாசன் (18), மகாலிங்கம் மோகன் (25)

## தரமற்ற

வெள்ளைநாடு அரிசி கொள் விலையாக ரூ 15.90க்கு வழங்கப்பட்டு ஆக கூடிய சில்லறை விலையாக 18.00 ரூபாவாக விற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருந்தும் பொதுமக்கள் பாவனைக்காக அரிசி ரூ20 00 ரூபாவாக விற்றமை கண்டுபிடிக்கப்பட்டது இது தொடர்பாக வர்த்தக முகாமையாளர் மேலதிக விசாரணைக்காக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என குறிப்பிடப்படுகிறது.

---

புதுக்குளம், ஈச்சங்குளம் ஆகிய இடங்களை சுற்றி வட்டமிட்ட புக்காரா விமானம் 4 30 மணியளவில் இலுப்பைக்குளம் காக்கையன் குளம் குடியிருப்புக்கள் மீது பதினொரு றொக்கட்டுகளை ஏவியதுடன் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டது இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரிய வரவில்லை.

மீண்டும் அதே தினமிரவு 8. 45 மணிமுதல 9. 45 மணிவரை ஓமந்தை நாவற்குளம் பரிநாட்டான்குளம் ஆகிய இடங்களை வட்டமிட்ட ஹெலி மற்றும் புக்காரா விமானங்கள் பரவலாக கலிபர் தாக்குதலை மேற்கொண்டன.

## நுணாவில்

னர் இருமுறை சுற்றி விட்டு மறுபடியும் இரு குண்டுகளை வீசின இருகுண்டுகளும் விழுந்த இடத்தில் பாரிய குழிகள் காணப்பட்டன இறுதியாக வீசிய குண்டினால உயிர் சேதங்கள் ஏற்படவில்லை

அருகில் உள்ள வீடுகளின் ஓடுகள் கூரைகள் சில சேதமாகின

இதேவேளை 10 மணியளவில் கொடிகாமம் அல்லாரைப் பகுதிகளில் றொக்கட் தாக்குதலை நடத்தின இதனால் வீதியில் கிடங்குகள் காணப்பட்டன பின்னர் உலங்குவானூர்தி ஒன்று தென்மராட்சியில பல பாகங்களிலும் சுற்றி சுற்றி கலிபர் தாக்குதலை நடத்தின [86]

## கிளாலி

இருந்து றொக்கெட் தாக்குதலும் நடாத்தப்பட்டது. மேற்படி விமானங்கள் எழுதுமட்டுவாழ் பகுதிகளிலும் 4 குண்டுகளை வீசியது அதில் 3 வெடிக்காத நிலையில் உள்ளன. இதேவேளை இயக்கச்சியை அண்டிய பகுதிகளில் உள்ள தென்னம் தோட்டத்தின் மீதும் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதேவேளை இயக்கச்சிப்பகுதியில் இருந்து சடும் ஷெல் தாக்குதல் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி தாக்குதல் இடம்பெறறுக் கொண்டு இருக்கும் போது உலங்குவானூர்திகளும் வீதிகளால். செல்லும் வாகனங்கள் மீது கலிபர் தாக்குதலை நடத்தின ஷெல் தாக்குதல்தலால் தென்மராட்சியே அதிர்ந்தது. எங்கும் ஒரே சத்தம் கேட்டவண்ணம் இருந்தது இத் தாக்குதல்கள் காலை 6 மணியில் இருந்து தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் இருந்தது. (86)

---

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று மாலை 3-15 மணியளவில் றொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதலினால் ம. புனிதவதி (65 வயது) என்பவர் காயமடைந்தார். மேலும் அப்பகுதியில அமைந்துள்ள இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

# இசை, நாடக விழா

(மல்லாகம்)

தெல்லி பழை மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்காக மகாஜனாக் கல்லூரி உயர்நிலை மாணவர் மன்றமும், இன்ரறக்ட் கழகமும் இணைந்து நடாத்தும் மாபெரும் இசை, நாடகவிழாஇன்று இரவு 7-00 மணிக்கு, இணுவில் கந்தசுவாமி கோவில் அருகாமையில் நடைபெறும் [09]

# மின்னல் தாக்கி சிறுமி பலி

(தென்மராட்சி)

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுமிகள் மீது மின்னல் தாக்கியதில் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் முகமாலையில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. த. சுவர்ணா (வயது 12) என்பவரே இச்சம்பவத்தில் பலியானவராவார் அவரது சகோதரி த சுகந்தி (வயது 10) காயமடைந்தார். (86)

# பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட [1993, 1994 ஆம் ஆண்டுகளுக்கான] டிப்ளோமா பயிற்சி நெறி அடுத்த மாதம் 9 ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வரும் முன்னோடிப்பரீட்சை காரணமாக எதிர்வரும் 30 ஆம்திகதி நடைபெற இருந்த இப்பயிற்சி நெறி பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [பா]

---

வந்தடைய முடியவில்லை.

இப் பயணிகள் 'குமாரி' கப்பல் மூலம் வந்தபோதிலும் கடற்படையினரின் தலையீட்டினால் திரும்பிச்சென்று காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்றனர். இக் கப்பலில் 23 பயணிகள் வந்தனர். யாழ். போதனா வைத்தியசாலையைச்சேர்ந்த மூன்று வைத்திய அதிகாரிகளும் விமான மூலம் பலாலிக்கு வந்து இக் கப்பலில் யாழ். வந்தபோதிலும் அவர்களும் காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்றனர்.

'நரோமா' கப்பல் மூலம் திருக்கோணமலைக்குச் செல்வதற்கென பருத்தித்துறைக்கு பயணிகள் வந்தபோதிலும் கப்பல் சேவை தடைப்பட்டதால் இப் பயணிகள் திரும்பிச்செல்ல நேரிட்டது. (யோ)

# விபத்தில் மரணம்

மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமுற்று யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி அங்கு மரணமானார்.

பாலசுப்பிரமணியம் மதினா [வயது 07] என்னும் சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக மரணமடைந்தவராவார். [சி]

# வரவேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தின் 1992/93ஆம் கல்வியாண்டைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்களுக்கான வரவேற்பு வைபவம் அடுத்த மாதம் இரண்டாம் திகதி பி.ப. 2. 00 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

# ஆதாரம் காட்டி பெறவும்

[தென்மராட்சி]

மீசாலைக்கும் சாவகச்சேரிச் சந்தைக்கும் இடையில் பிரதான வீதியில் கடந்த மூன்று நாட்களுக்குமுன் சைக்கிளொன்று கண்டெடுக்கப்பட்டு இலங்கை செஞ்சிலுவைச்சங்க மீசாலை கிளைத் தலைவர் சி. கணேசனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குரியவர் தகுந்த அடையாளங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம். [86]

## பிறந்த நாள் வாழ்த்து

**[29-9-93]**



### விஜேந்திரகுமார் நிகேதன்

பனையைச் சேர்ந்த விஜேந்திரகுமார்- தயாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிகேதன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (29-9-93) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, செல்லையா அப்பப்பா, அப்பம்மா, பூட்டப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், ரகுமாமா, அத்தைமார், கிளிநொச்சியில் பணிபுரியும் அத்தைகள் விஜி, லலிதா, கோமதி, சுடா அத்தை, அங்கிள், ராஜ் அத்தான் நிகேமச்சி, அண்ணாமார், அக்காமார், அம்மம்மா, ஐயா, மாமாமார், சின்னத்துரை குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நிகேதனை பலகலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(6102)

### பின்போடப் பட்டுள்ளது

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய கல்விச்சேவை வளர்ச்சி நிதிக்காக 30-09-93 அன்று இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற விருந்த ஆரோடு நோகேன் நாடக நிகழ்ச்சி பின்போடப் பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் ஈழநாதப் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

(சி-7502)

### நினைவஞ்சலிக் கூட்டம்

கரும்புலி மேஜர் புவியரசன் / புகழரசனின், (சுப்பிரமணியம் நாககீதன்) நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 11.00 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் சிறப்புரையாற்றவுள்ளனர்.

### சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் கொடுப்பனவு

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் ஆவணி மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் நாளை வியாழக்கிழமை போயா விடுமுறைத்தினத்தன்று தொடக்கம் வங்கியில் பணமாக வழங்கப்படும் என தொழிற்சாலை பிரதம கணக்காளர் அறிவிக்கின்றார்.

### இராணுவத்திலிருந்து தப்பியோடிய

# இரு அதிகாரிகள் உட்பட முந்நூறுபேர் கைது

[கொழும்பு]

இராணுவத்தைவிட்டு தப்பியோடியவர்களில் முந்நூற்றியொருபேர் கடந்த ஆறு மாதத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் இருவர் இராணுவ உயர் அதிகாரிகள் தரத்தை சேர்ந்தவர்கள் என்றும் இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

லங்காதீப பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்; இராணுவத்திலிருந்து தப்பியோடும் போது அநேகமானோர் துப்பாக்கிகள் கைத்துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களுடனேயே தப்பியோடியுள்ளனர் என்றும் ரி-56 ரகத் துப்பாக்கி உட்பட கைத்துப்பாக்கிகளுடன் தலைமறைவாகிய இராணுவத்தினரால் பல அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இத்தகையவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவது அண்மைக் காலங்களில் அதிகரித்து இருப்பதாகவும், எனவே இவ்வாறு தப்பியோடியவர்கள் தொடர்பாக விசேட அவதானமாக செயல்படுமாறும் பொலிஸ் தலைமையலுவலகம் ஊடாக சகலபொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தப்பியோடிய இராணுவத்தினர் தொடர்பாக ஆராய புதிய இரகசிய பிரிவொன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தப்பியோடிய அநேகர் தற்போது வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்று சென்றிருப்பதால் தப்பியோடிய அனைவரையும் கைது செய்ய முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## புங்குடுதீவு-நயினாதீவு

**ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)**

**201/1 3 ம் குறுக்குத்தெரு-யாழ்ப்பாணம்.**

## முக்கிய அறிவித்தல்

**கிளைக்குழுத் தேர்தல்-1993**

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமனப்பத்திரங்களை பின்வரும் திகதியில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

01. நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி [2-10-1993] சனிக்கிழமை. காலம் முற்பகல் 9-00 மணி தொடக்கம் 10-00 மணிவரை அபேட்சகர் நியமனத்தின் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அன்றையதினம் (2-10-93) மு. பகல் 10-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்துமூலம் சமர்பிக்கப்படல் வேண்டும்.

02. தேர்தல் நடைபெறும் திகதி 9-10-1993) சனிக்கிழமை காலம் மு. பகல் 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை கிளைகளுக்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| கிளை இல. | 01. ஊரைதீவு | இல. 27. ஜும்மா பள்ளிவாசல் வீதி யாழ்ப்பாணம் |
| ,, ,, | 02. மடத்துவெளி | ,, 17. ,, ,, ,, |
| ,, ,, | 03. மாவுதிடல் | மணியம் கட்டிடம் சிறாம்பியடி வீதி ,, |
| ,, ,, | 05. தல்லைப்பற்று வடக்கு | ,, ,, ,, ,, |
| ,, ,, | 06. தல்லைப்பற்று தெற்கு | இல. 29. ஜும்மா பள்ளிவாசல் வீதி ,, |
| ,, ,, | 07. மண்காடு | ,, 03. ,, ,, ,, |
| ,, ,, | 09 மத்தி | இல. 147 மானிப்பாய் வீதி ,, |
| ,, ,, | 10. பெருங்காடு | ,, 174. கே. கே.எஸ் வீதி ,, |
| ,, ,, | 12. பெருங்காடு தெற்கு | ,, 06 ஜும்மா பள்ளிவாசல் வீதி ,, |
| ,, ,, | 13. குறிகாட்டுவான் | ,, 06. ,, ,, ,, |
| ,, ,, | 14. கணேசா | ,, 03. ,, ,, ,, |
| ,, ,, | 15. இறுப்பிட்டி | ,, 18. ,, ,, ,, |
| ,, ,, | 16. அரியநாயகம் புலம் | ,, 28. ,, ,, ,, |
| ,, ,, | 19 நயினாதீவு தெற்கு | ,, 201/1 3-ம் குறுக்குத்தெரு ,, |
| ,, ,, | 20. நயினாதீவு வடக்கு | ,, ,, ,, ,, ,, |

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம். (சி-7513)

திரு. நா. தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

**KILLER INSTINCT**

(கொலை வெறி)

(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30 மணி,

மாலை 4-00 மணி, 6-00மணி

(சி-7352)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**28-09-93**

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலகில்
24-07-1935

விண்ணுலகில்
30-08-1993

### மனுவல் ஜேக்கப் அருமைத்துரை

கடந்த 30-08-1993 இல் நீர்கொழும்பில் அகால மரணமடைந்த மனுவல் ஜேக்கப் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 30-09-1993வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாருக்காக மன்றாடுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், கடிதங்கள், தந்திகள் மூலமாகவும், வீட்டிற்கு வருகை தந்தும் அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

19/4 பீச் லேன்
சச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.
(சி-7482)

---

# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

(1) ★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

(2) ★ **றீவைன்டிங்** டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டார் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

(3) ★ **மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்**

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

(4) ★ "Special English Class"

**ஆரம்பம்: 04-10-93(கிழமை நாட்கள்)**
**03-10-93 சனி, ஞாயிறு**

விபரங்களிற்கு:

## Jaffna Technical Institute

JAFFNA TECHNICAL INSTITUTE
JTI
SRILANKA

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை - மேல்மாடி) (சி-7508)

---

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11052

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-2509, 22-4895, 40-4429, 27-7043, 27-9649, 28-2464, 40-7299, 26-0547, 24-5394, 24-5734, 28-1730, 26-6527, 27-9404.

---

## மரண அறிவித்தல்கள்

### கணேசன் கவுசிகா

யாழ் திருக்குடும்ப சன்னியர் மடம்
(ENGLISH CONVENT, JAFFNA)

28.9.93 அன்று அகால மரணமானார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கணேசன், சிவதாஸ்.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (6134)

---

### வீரவேங்கை காந்தரூபன்

(சேனாதிராசா ஜெயகாந்தராசா)

மயிலிட்டி 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வீரவேங்கை காந்தரூபன (சேனாதிராசா ஜெயகாந்தராசா) 28-9-93 அன்று வீரச்சாவடைந்துவிட்டார். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
தாய், தந்தை, சகோதர, சகோதரிகள்

தற்போதைய முகவரி:
திரேசம்மா கோவிலடி,
சூராவத்தை, சுன்னாகம். (6136)

---


♥ சுவையருவி ♥

மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

❋ ஐஸ்கிறீம் வகைகள் ❋ குளிர்பான வகைகள்
❋ சைவ, அசைவ, மேலைத்தேச, கீழைத்தேச
❋ சிற்றுண்டி உணவு வகைகள்
❋ முதற்தர பாண் வகைகள்
❋ வைபவ பரிமாறு சேவை

குறிப்பு: சைவ, அசைவ உணவு வகைகள் வெவ்வேறு சமையலறைகளில் சுத்தமாக தயாரிக்கப்படுகின்றன.

(சி-7505)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.